www.srilankamuslimsworld.com

# அகதியான போது .................



----------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)

**பாகம் 11**

1997/98 காலம் அது .பலத்த யுத்த களத்தின் பின்னர் யாழ்ப்பாணமும் அதை பகுதிகளும் அரசாங்கத்தின் வசம் வந்திருந்த காலம் .யாழ்ப்பாணத்துக்கு

விமானம் மூலம் மக்கள் பயணம் செய்து தமது சூறையாடப்பட்ட எஞ்சியிருக்கும் அத்திவாரங்களை பார்வையிட்டுக்கொண்டிருந்த நேரம் அது .

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பிரபல வியாபாரிகள் இருவரும் ஒரு படித்த மனிதரும் சில தில்லுமுல்லுகளை செய்வதாக பருத்தித்துறை நிருபர்

அங்கிருந்து எனக்கு தெரிவித்த போது எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சர்யத்தையும் ஏற்படுத்தியது .

பிறரின் சொத்துக்களை தமது என்று கூறி குத்தகைக்கு விட்டமை ,எஞ்சியிருந்த சொத்துக்களை விற்றமை ,உட்பட தாங்கள் தான் யாழ்ப்பாண முஸ்லீம் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறி பல விடயங்களை செய்தமை கவலைக்குரிய விடயம் .இந்த விடயங்களை நான் நேராக பார்க்காமல் அவதூறு கூறுவது ஆகுமானதல்ல . தனியே

www.padippakam.com

பருத்தித்துறை நிருபரின் கருத்தை நான் அப்போது நம்பியிருக்கவில்லை . யாழ்ப்பாணம் சென்ற பல முஸ்லீம்கள் இது பற்றி ஆத்திரப்பட்டுக்கொண்டமையை அப்போது காணக்கூடியதாக இருந்தது .அந்த நபர்களுக்கு இந்த சம்பவத்தின் பின் இருந்த மதிப்பும் மரியாதையும் இந்த சம்பவம் அம்பலமான பின்னர் மலிந்த விலைக்கு போயிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது .

இங்கு இன்னொரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும் .யாழ்ப்பாணத்தில் புலிகள் சூறையாடிய அப்பாவி முஸ்லீம்களின் அசையும் அசையா சொத்துக்கள் இடைக்கலப்பகுதியில் 'தமிழீழ நிதி ' என்ற பேரில் ஏலம் போடப்பட்டிருந்ததுடன் . முஸ்லீமகளின் சொத்துக்களின் கிரயத்தில் அவர்களது தமிழீழ போராட்டம் இடம்பெற்றது .

நான் ஏற்கனேவே கூறியது போல எனது குடும்பமும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் போது இருந்த நகைகளை வீட்டின் பின் புறம் உள்ள கொல்லையில் குழி தோன்றி புதைத்து விட்டு வந்தனர் . தற்காலிக சமாதானம் நிலவிய காலத்தில் நகைகளை திரும்ப அகழ்ந்து எடுக்கலாம் என்று எதிர்பார்த்து அங்கு சென்ற எனது தகப்பனுக்கு ஏமாற்றம் மாத்திரம் காத்திருந்தது .நகைகள் புதைக்கப்பட்டிருந்த இடத்தில் ஏற்கனவே குழி தோன்றப்பட்டிருன்தது . யாழ்ப்பான முஸ்லீம்களின் பகுதிகளில் ஆரம்பத்தில் பங்கர்கள் தோன்றிய புலிகள் அங்கு புதைத்து வைக்கப்படிருந்த நகைகளை கண்டு பிடித்த போது metal detector களைக்கொண்டு ஒவ்வொரு வீடு வீடாக சோதனை நடத்தி ஏறத்தாள எல்லா வீடுகளிலும் நகைகளை கொள்ளையடித்தனர் .

பகடி என்னவென்றால் சட்டவிரோதமாக கொள்ளையடிக்கப்பட்ட அந்த நகைகளையும் சொத்துக்களையும் விற்று திரட்டிய அந்த பணத்தை விற்று பெற்ற ஹராமிய காசை இப்போது ' தமிழீழ நிதி ' என்று அழைப்பதுதான் . அதற்கு வழங்க வேண்டிய சரியான பெயர் 'முஸ்லீம்களிடம் சூறையாடப்பட்ட நிதி '.

www.padippakam.com

எவ்வாறு சட்ட விரோதமாக தமது போராட்டதை புலிப்பயங்ககவாதிகள் நடத்தினார்களோ அதே விதமாக அவர்களின் அழிவும் இடம்பெற்றது .ஒவ்வொரு முஸ்லீம்களின் கண்ணீரும் ,ஒவ்வொரு தப்பனின் தாயின் ,இளமைக்காலம் கருக்கப்பட்ட என்னைப்போன்ற இளையவர்களின் கண்ணீருக்கும் துஆக்களுக்குக்ம் , 20 ஆண்டுகளுக்குள் எல்லாம் வல்ல அல்லாஹ் விடிவு கொடுத்தான் . சட்ட விரோதமாக ,ஹராமாக ,உழைக்கப்படும் சொத்துக்களும் ,எடுக்கப்படும் போராட்டங்களும் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை என்பதற்கு புலிகளின் கொடூரத்தனமான போராட்டம் நல்ல உதாரணம் .

அகதியான போது எனக்கு ஏற்பட்ட அவலங்கள்தான் .இது இலங்கை முஸ்லீகளுக்கு முடிந்து போன சரித்திரம் இல்லை .பெரும்பான்மை சமூகங்களோடு அண்டி வாழும் நாம் பல முறைகள் அகதிகளாக்கப்பட்டுள்ளோம் .யாழ்ப்பாண முஸ்லீம்கள் மாத்திரம் யாழ்ப்பாண த்துக்குள்ளேயே 4 முறைகள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் (ஆதாரம் -எனது தந்தையின் நூல் ( ரஹீம் )-யாழ்ப்பாண முஸ்லீம்களின் வரலாறும் பண்பாடும் ' என்பதும் 1915 கலவரம் தொடக்கி 1982 இனக்கலவரம் 1990 வரை முஸ்லீம்கள் வெளியேற்றம் ,1991 கிழக்கு மாகாண அசம்பாவிதங்கள் என்று தொடராகி 1994 பேருவளை கலவரம் ,1998 மாவனெல்லை கலவரம் என்று தொடர்ந்து கொண்டிருக்கும் பிரச்சினை எப்போதும் முடியப்போவதில்லை .

1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்படும் வரை யாழ்ப்பணத்தில் இருக்கும் போது வெளியேற்றம் பற்றி கற்பனை பண்ணிக்கூட பார்த்திருக்கவில்லை .இது போன்ற வெளியேற்றங்கள் கொழும்பில் என்ன காலியில் என்ன கண்டியில் என்ன enkum எப்போதும் நடக்க முடியும் .இந்த தொடரின் நோக்கம் இனியொரு அகதி நெருக்கடி ஏற்படும் போது சாக்கடையில் நின்று சங்கீதம் பாடும் தொப்பி போட்ட ,முக்காடு போட்ட எந்த அரசியல் வாதிகளையும் நம்பாது நமது சமூகத்துக்காக சாதாரண நாம் செய்ய

படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய கடமைகள் நிறைய உள்ளன என்பதையும் சமூகத்தால் நமது அரசியல் வாதிகளால் ,சமூக தலைவர்களால் என்னைப்போற்ற அகதி இளைஞர்கள் இனிமேலும் பாதிக்கப்படக்கூடாது .என்பதையும் வலியுறுத்தவே இந்த தொடர் எழுதப்பட்டதே தவிர யாரையும் மனம் நோகடிக்கும் நோக்கோடு எழுதப்படவில்லை என்பதையும் அப்படி நோகடித்திருக்கும் பட்சத்தில் இறைவனிடமும் ,அவர்களிடமும் மன்னிப்பு கேட்டு இந்த தொடருக்கு முற்றுபுள்ளி வைக்கிறேன் ..

நன்றி .அஸ்ஸாலாமு அலைக்கும்

(முற்றும் )

TO READ OLD CHAPTERS ...


# பாகம் 1
# பாகம் 2
# பாகம் 3
# பாகம் 4
# பாகம் 5
# பாகம் 6
# பாகம் 7
# பாகம் 8
# பாகம் 9
# பாகம் 10



படிப்பகம்